දුරකථන/தொலைபேசி இல/Telephone Nos.
අමාත්‍යතුමා / அமைச்சர் / Minister: 2784832, 2784807, 2785617
ලේකම් / செயலாளர் / Secretary: 2784812
කාර්යාලය / அலுவலகம் / Office: 2785141-50, Fax: 2784846
ඊමේල්/ஈ-மெயில்/E-mail : isurupaya@moe.gov.lk
ඔබේ අංකය / உமது இல. / Your No. ......................................

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education
"ඉසුරුපාය"
බත්තරමුල්ල.
"இசுருபாயா"
பத்தரமுல்ல.
"Isurupaya"
Battaramulla.

මගේ අංකය / எமது இல. / My No.: ED/3/40/1/1/5

දිනය / திகதி / Date: 2013.06. 07

சுற்றறிக்கை இல: **26/2013**

சகல மாகாண பிரதம செயலாளர்கள்,
சகல மாகாண கல்விச் செயலாளர்கள்,
பரீட்சை ஆணையாளர் நாயகம்,
கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்,
சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல அரச மற்றும் அங்கீகரிக்கப்பட்ட தனியார் பாடசாலைகளின் அதிபர்கள்,
பிரிவெனா தேரர்கள்.

**இலங்கையின் பல்கலைக்கழகங்கள், தேசிய கல்வி நிறுவகம் மற்றும் அரச அங்கீகரிக்கப்பட்ட வேறு மூன்றாம் நிலைக் கல்வி நிறுவனங்களின் உள்நாட்டுப் பாடநெறிகளைத் தொடர்வதற்காக கற்கை விடுமுறையினை வழங்குதல்.**

இலங்கையின் பல்கலைக்கழங்கள், தேசிய கல்வி நிறுவகம் மற்றும் அரச அங்கீகரிக்கப்பட்ட வேறு மூன்றாம் நிலைக் கல்வி நிறுவகங்களின் பாடநெறியினை முழு நேரம் அல்லது பகுதி நேரம் தொடர்வதற்காக சம்பளத்துடன் கற்கை விடுமுறை வழங்குவது தொடர்பில் இது வரையில் வழங்கப்பட்டுள்ள சகல சுற்றறிக்கைகளுக்கும் அப்பால் இதற்குப் பின்னர் இச்சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள சட்ட ஒழுங்கு விதிமுறைகள் அமுலில் இருக்குமென அறியத்தருகிறேன்.

1) கற்கை விடுமுறை பெறுவதற்குத் தகைமை பெறுவதற்கான உத்தியோகத்தர்கள்
   - 1.1. இலங்கை கல்வி நிர்வாக சேவையின் உத்தியோகத்தர்கள்
   - 1.2. இலங்கை ஆசிரிய கல்வியியலாளர் சேவையின் உத்தியோகத்தர்கள்
   - 1.3. இலங்கை அதிபர் சேவையின் அதிபர்கள்
   - 1.4. அரச பாடசாலைகள், அரச அங்கீகாரம் பெற்ற பிரிவெனாக்கள் மற்றும் தனியார் பாடசாலைகளின் ஆசிரியர்கள்,

கல்வித் துறைக்குரிய கல்விசாராப் பணியாளர் சபைக்காக அவர்களின் தொழில்சார் தேவைகளுக்கு அமைய உரிய பாடநெறிகளுக்கு தாபன விதிக்கோவையின் விதிமுறைகளுக்கு அமைய கற்கை விடுமுறையினைப் பெற்றுக்கொள்ள முடியும்.

2) **கற்கை விடுமுறையினைப் பெற்றுக்கொள்ள விண்ணப்பிக்கக் கூடிய பாடநெறிகள் - இணைப்பு இல. 1 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.**

2.1. இதில் குறிப்பிடப்படாத கல்வித் துறையுடன் தொடர்புபட்ட பாடநெறிகளுக்கு விண்ணப்பிப்பதாயின் தாபனப் பொறுப்பாளரினால் உரிய பாடநெறியினைத் தொடர்வது தொடர்பாக நியாயநிலைப்படுத்தலை தமது பரிந்துரையுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

2.2. முழு நேரப் பாடநெறிக்காக சம்பளத்துடன் கற்கை விடுமுறை பெற்றுக் கொள்வதாயின் அப்பாடநெறி தமது நாளாந்தக் கடமைக்காக நேரடியாகச் சம்பந்தப்பட்டிருப்பின் அல்லது தமது பதவிக்குரிய ஆட்சேர்ப்பு பதவியுயர்வு ஒழுங்கு விதிமுறைகளுக்கு உரியதான பாடநெறியாக இருக்க வேண்டும். கற்கை விடுமுறையினை அங்கீகரிக்கும் போது அப்பாடநெறியினை பாட இணை செயற்பாடுகளை தழுவக் கூடியது தொடர்பில் அதிபர் / பிரிவெனாப் பொறுப்பாளர்கள் / திணைக்களப் பொறுப்பாளரின் உறுதி அத்தியவசியமானதாகும்.

2.3. இச்சுற்றறிக்கையின் ஒழுங்கு விதிகளுக்கு அமையத் தொடரப்படும் பாடநெறி கல்வி முறைமையின் விருத்தி மற்றும் உத்தியோகத்தரின் தொழில்சார் விருத்திக்காக பங்களிப்புச் செய்யக்கூடியது என்பதனை திணைக்களப் பொறுப்பாளரினால் உறுதிசெய்யப்பட்டதன் பின்னர் பரிந்துரை செய்தல் வேண்டும். தகுதிகாண் காலத்திற்குப் பின்னர் உத்தியோகத்தர் / ஆசிரியர்களுக்கு தமது சேவைக் காலத்தில் ஒரு வருடம் பூர்த்தியடைந்ததன் பின்னர் கற்கை விடுமுறையினைப் பெற்றுக்கொள்ள முடியும்.

2.4. இணைப்பு – 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள பாடநெறிகளுக்காக விண்ணப்பித்தல் இணைப்பு – 2 மாதிரிப் படிவத்திற்கு அமைய மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

2.5. உரிய நிறுவனங்களுக்கு அமைய கற்கை விடுமுறைக்கான விண்ணப்பப்படிவத்தினை அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கக்கூடிய முறைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

| உத்தியோகத்தர் / ஆசிரியர் | பரிந்துரை | பரிந்துரை | பரிந்துரை | அங்கீகாரம் |
|---|---|---|---|---|
| தேசிய பாடசாலைகளில் சேவையாற்றும் ஆசிரியர்கள் | அதிபர் | வலயக் கல்விப் பணிப்பாளர் | மாகாணக் கல்விப் பணிப்பாளர் | நிரல் கல்வி அமைச்சின் செயலாளர் |
| தேசிய பாடசாலைகளில் சேவையாற்றும் அதிபர்கள் | - | வலயக் கல்விப் பணிப்பாளர் | மாகாணக் கல்விப் பணிப்பாளர் | நிரல் கல்வி அமைச்சின் செயலாளர் |

| | | | | |
|---|---|---|---|---|
| மாகாண பாடசாலைகளில் சேவையாற்றும் ஆசிரியர்கள் | அதிபர் | வலயக் கல்விப் பணிப்பாளர் | மாகாணக் கல்விப் பணிப்பாளர் | மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் |
| மாகாண பாடசாலைகளில் சேவையாற்றும் அதிபர்கள் | - | வலயக் கல்விப் பணிப்பாளர் | மாகாணக் கல்விப் பணிப்பாளர் | மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் |
| அரச அங்கீகாரம் பெற்ற பிரிவெனாக்கள் | பிரிவெனாப் பொறுப்பாளர் | பதிவாளர் | - | நிரல் கல்வி அமைச்சின் செயலாளர் |
| அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகள் | முகாமையாளர் | - | - | - |
| ஏனைய கல்வி நிறுவனங்களில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் | உரிய திணைக்களப் பொறுப்பாளர் | - | - | நிரல் / மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் |

3) முழு நேரப் பாடநெறிக்காக சம்பளத்துடன் கற்கை விடுமுறையினைப் பெற்றுக்கொள்ளல்

3.1. தற்போது சேவையில் உள்ள ஆசிரியர்களை பல்கலைக்கழகப் பட்டத்தை முழு நேரம் தொடர்வதற்காக பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் பரிந்துரையுடன் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும் ஆசிரியர்களுக்காக கற்கை விடுமுறைக்கு விண்ணப்பிக்க முடியும்.

3.2. ஏற்கனவே முழு நேரம் சம்ளத்துடன் கற்கை விடுமுறை பெற்றுக்கொள்ள மேற்கூறப்பட்ட இல. 1 இன் கீழுள்ள ஆசிரியர்கள் / உத்தியோகத்தர்கள் முழு நேர சம்பளத்துடன் கற்கை விடுமுறைக்காக விண்ணப்பிக்கும் போது முறிக்கான கால எல்லை பூர்த்தியடைந்திருத்தல் வேண்டும்.

3.3. போதனாவியல் டிப்ளோமாதார ஆசிரியர்களுக்கு முழு நேரப் பாடநெறிக்காக சம்பளத்துடன் கற்கை விடுமுறையினைப் பெற்றுக்கொள்ள முடிவது கட்டாய சேவைக் காலமான 5 வருடங்கள் சேவையாற்றியதன் பின்னராகும்.

3.4. ஏதேனும் ஒரு காரணத்தினால் பாடநெறி தற்காலிகமாக இடைநிறுத்தப்படும் பட்சத்தில் மீளப் பாடநெறி ஆரம்பிக்கப்படும் வரை தமது சேவை இடத்திற்கு சமூகமளிக்க வேண்டும்.

4) வார இறுதிப் பாடநெறிக்காக பெற்றுக்கொள்ளும் கடமைப்பொருட்டு லீவு

4.1. கற்கைப் பாடநெறிக்காக வார இறுதியில் சமூகமளிப்பதாயின் சேவை இடத்தில் இருந்து கற்கை மத்திய நிலையத்துக்குள்ள தூரம் 50 கிலோ மீற்றரை விட மேற்பட்ட உத்தியோகத்தருக்காக வார இறுதிக்கு முனனைய தினம் வெள்ளிக்கிழமை அல்லது பின்னைய தினம் திங்கட் கிழமையாயின் ஒரு நாள் கடமை பொருட்டு விடுமுறை பங்கேற்பினை உறுதி செய்ததன் பின்னர் உரித்தாகின்றது.

4.2. வார இறுதி பட்டப்பின் பட்ட கல்விப் பாடநெறியினைத் தொடரும் சகல உத்தியோகத்தர்களுக்காகவும் பங்கேற்பினை உறுதி செய்ததன் பின்னர்

அப்பாடநெறி நடைபெறும் வார இறுதி நாட்களின் முன்னைய தினம் வெள்ளிக்கிழமை அல்லது பின்னைய தினம் திங்கட்கிழமை ஆகிய இரண்டில் ஒரு தினத்திற்கு கடமைப் பொறுப்பு விடுமுறையினைப் பெற்றுக்கொள்ள முடியும். (ஆண்டுக்கு உயர்ந்தபட்சம் 20 நாட்களாகும். ஒரு வருடத்திற்குப் பின்னர் பாடநெறிக்காக சம விகிதாசார அடிப்படையில் பிரிக்கப்படும் நாட்களின் எண்ணிக்கையினைக் கணிப்பீடு செய்ய வேண்டும்.)

4.3. பட்டப்பின் பட்ட கல்வி டிப்ளோமா பாடநெறி (வார இறுதி) தொடரும் பாடசாலைகளில் சேவையாற்றாத இலங்கை கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தர்கள் மற்றும் இலங்கை ஆசிரிய கல்வியியலாளர் சேவையின் உத்தியோகத்தர்களுக்கு இப்பாடநெறியின் பிரயோகக் கற்பித்தல் கட்டத்துக்காக 10 வாரங்கள் கற்கை விடுமுறை உரித்தாகும்.

5) **இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் பாடநெறியினைத் தொடரும் உத்தியோகத்தர் களுக்காக கீழ்க்குறிப்பிட்டவாறு கற்கை விடுமுறை உரித்தாகும்.**

5.1. பாடநெறியினைத் தொடரும் கால எல்லைக்குள் பாடநெறி நடைபெறும் தினங்களுக்கு அமைய ஒரு மாதத்துக்கு ஒரு நாள் வீதம்.

5.2. பரீட்சைக்காக இல. 6 இற்கமையச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும்.

5.3. திறந்த பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானப் பட்டத்தினைத் தொடரும் உத்தியோகத்தர் / ஆசிரியர்களுக்காக மேற்கூறப்பட்ட 5.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள விடுமுறைத் தேவைகளுக்கு அமைய மாதத்திற்கு சில நாட்களாக இருந்தபோதிலும் பெற்றுக்கொள்ள முடிவதுடன் ஒரு கல்வி ஆண்டுக்காக உரித்தாகும் உயர்ந்தபட்ச விடுமுறை நாட்களின் எண்ணிக்கை 10 ஆகும்.

6) **பரீட்சைக்கான விடுமுறை**

6.1. வார இறுதி நாட்களில் ஒரு வருடத்திற்கு பாடநெறியினைத் தொடரும் உத்தியோகத்தர்களுக்காக பாடநெறியின் இறுதியில் பரீட்சைக்குத் தயாராகுவதற்காக பரீட்சை நடைபெறும் தினம் உட்பட வழங்கப்படும் கற்கை விடுமுறை பரீட்சை நடைபெறும் காலத்திற்குள் அல்லது பரீட்சைக்கு முன்னர் 20 நாட்கள் உயர்ந்தபட்சத்தின் கீழ் (வார இறுதி மற்றும் விசேட விடுமுறை நாட்கள் தவிர கடமை மேற்கொள்ளும் நாட்களில்) பெற்றுக்கொள்ள முடியும்.

அரையாண்டுப் பரீட்சை (Semester) முறையின் கீழ் பாடநெறியினைத் தொடர்வதற்கு மேற்கூறப்பட்ட 20 நாட்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

6.2. இரண்டு வருட கால வார இறுதிப் பாடநெறிக்காக வருடாந்தம் பரீட்சை நடைபெறுவதாயின் 10 நாட்கள் வீதம் இரு சந்தர்பபங்களில் மூன்று வருடங்கள் வார இறுதிப் பாடநெறிக்காக வருடாந்தம் பரீட்சை நடைபெறுவதாயின் 10 நாட்கள் வீதம் மூன்று சந்தர்ப்பங்களில் இவ்விடுமுறையினைப் பெற்றுக்கொள்ள முடியும். இரண்டு வருடங்கள் / மூன்று வருட இறுதியில் மாத்திரம் பரீட்சை நடைபெறுவதாயின் அதற்காக 20 நாள் விடுமுறையினை மாத்திரம் பெற்றுக்கொள்ள முடியும்.

6.3. நிறுவன ரீதியில் ஆசிரியப் பயிற்சியினைத் தொடரும் பட்டதாரியல்லாத பயிற்றப்படாத ஆசிரியர்களுக்காக இறுதிப் பரீட்சையினை அவர்களது ஆசிரிய கல்லூரியின் கால எல்லைக்குள் பின்னர் பாடசாலையில் சேவையாற்றும் போது நடாத்தப்படும் பட்சத்தில் அவ் இறுதிப் பரீட்சைக்குத் தயாராகுவதற்காக பரீட்சையின் கால எல்லைக்கு முன்னர் இரு வாரங்கள் கற்கை விடுமுறையினைப் பெற்றுக்கொள்ள முடியும்.

6.4. பரீட்சைக்காக கற்கை விடுமுறை பெற்றிருக்கும் போது ஏதேனும் தவிர்க்க முடியாத காரணத்தினால் பல்கலைக்கழகம் அல்லது உரிய நிறுவனத்தினால் பரீட்சை ஒத்திவைக்கப்படும் பட்சத்தில் உடனடியாக சேவைக்குச் சமூகமளிக்க வேண்டியதுடன் பரீட்சை நேர அட்டவணையினைச் சமர்ப்பித்ததன் பின்னர் மீள எஞ்சியுள்ள நாட்களை மாத்திரமே பெற்றுக்கொள்ள முடியும்.

7) **கற்கை விடுமுறையின் அங்கீகரிக்கும் ஒழுங்கு விதிமுறைகள் :**

7.1. கற்கை விடுமுறையினைப் பெற்றுக் கொள்வதற்காக குறைந்தபட்சம் ஒரு வாரத்துக்கு முன்னர் தமது கற்கை விடுமுறை விண்ணப்பப்படிவத்தினை திணைக்களப் பொறுப்பாளர் / அதிபரின் பரிந்துரையுடன் அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பிக்க வேண்டும். அத்துடன் 6 மாதங்களை விட மேற்பட்ட பாடநெறிக்காக பொது நிர்வாகச் சுற்றறிக்கை இல. 43/88 இற்கமைய உடன்படிக்கைப் படிவத்தினைப் பூர்த்தி செய்து வழங்க வேண்டும்.

7.2. பாடநெறிக்கு விண்ணப்பிக்கும் உத்தியோகத்தரின் கடமைத் தழுவலுக்காக பொருத்தமான ஆசிரியர் / உத்தியோகத்தர் பெயரிடப்பட்டிருக்க வேண்டியதுடன் சம்பளத்துடன் கற்கை விடுமுறையினை அங்கீகரித்தல் / பரிந்துரைகள் மேற்கொள்வது 2.5 அட்டவணைக்கு அமைய மேற்கொள்வதற்குப் பொறுப்பாக இருத்தல் வேண்டும்.

7.3. கற்கை விடுமுறையினைப் பெற்றுக்கொள்ளும் ஆசிரியர் / உத்தியோகத்தர் தமது சமூகமளிப்புச் சான்றிதழினை உரிய நிறுவனங்களிடமிருந்து பெற்றுக் கொண்டு தமது நிறுவனப் பொறுப்பாளருக்குச் சமர்ப்பிக்க வேண்டும். பாடநெறியினைத் தொடர்ந்து இறுதியில் உரிய நிறுவனத்தினால் பெற்றுக்கொள்ளப்பட்ட பெறுபேற்றுக் குறிப்பினை விடுமுறையினை அங்கீகரித்த பொறுப்பாளருக்கு சமர்ப்பிக்க வேண்டியடன் அவ்வாறு மேற்கொள்ளாதவர்களுக்கு பெற்றுக் கொள்ளும் விடுமுறை சம்பளமற்ற விடுமுறைக் காலமாகக் கருதிச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

7.4. ஒரு சம்பளத்துடன் கற்கை விடுமுறைக்கு பின்னர் தாபன விதிக்கோவையின் XII இன் 14.6 வாசகத்திற்கு அமைய கட்டாய சேவைக் காலத்திற்குள் சேவையாற்ற வேண்டியதுடன் மீண்டும் கற்கை விடுமுறைக்கு விண்ணப்பிக்க வேண்டியது அக்கால எல்லையில் சேவையாற்றியதன் பின்னராகும்.

7.5. கற்கை விடுமுறை அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர் கட்டாய சேவைக் காலத்தினைத் தாண்டுவதற்கு முன்னர் ஓய்வுபெறும் பட்சத்தில் பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 24/97 இற்கமையச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

7.6. சம்பளத்துடன் கற்கை விடுமுறையினை அங்கீகரிக்க முடிவது உயர்ந்தபட்ச கால எல்லைக்குரிய பாடநெறியின் காலத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டிருக்கும். சம்பள மற்ற கற்கை விடுமுறை தொடர்பில் தாபன விதிக்கோவையின் ஒழுங்கு விதிகள் ஒழுங்கில் இருக்கும்.

7.7. ஒரே தடவையில் இரு பாடநெறிகளினைத் தொடர்வதற்காக கற்கை விடுமுறையினைப் பெற்றுக்கொள்ள முடியாது.

7.8. உரிய கால எல்லைக்குப் பொருத்தமானவாறு விடுமுறை அங்கீகாரக் கடிதம் வழங்கப்பட்டதன் பின்னர் கற்கை விடுமுறையினைப் பெற்றுக் கொள்வதற்கு முன்னர் தாபன விதிக்கோவையின் XII இன் 14.4 மற்றும் XV இன் 4.1 வாசகத்திற்கு அமைய உடன்படிக்கை மற்றும் முறியில் ஒப்பமிட்டு சேவையில் இருந்து விடுவிக்கும் கடிதத்தினை வழங்க வேண்டும். அக்கடிதம் சமர்ப்பிக்கப் படுவோருக்கு மாத்திரம் பாடநெறிக்காக பதிவுசெய்துகொள்வதற்கு உரிய நிறுவனங்களுக்கு ஆலோசனை வழங்கப்படும்.

7.9. பூரணப்படுத்தப்பட்ட சம்பளத்துடன் கற்கை விடுமுறையினைப் பெற்றுக் கொள்ளும் உத்தியோகத்தர் பூரணப்படுத்தப்பட்ட முறியனை கால எல்லையின் உயர்ந்தபட்சம் அவரது ஓய்வுபெறும் தினம் வரை இருக்க வேண்டும்.

7.10. பாடநெறியினைத் தொடர்வோரினால் நிர்வாகத்திற்குப் புறம்பான சந்தர்ப்பங்களில் பொறுப்பாளரின் பரிந்துரைக்கு அமைய மாத்திரம் கற்கை விடுமுறைக் காலத்தை நீடிக்க மற்றும் அச்சுற்றறிக்கைக்கு அமைய வரைவிலக்கணத்தை வழங்கும் அதிகாரம் கல்விச் செயலாளருக்கு உரியதாகும்.

**எஸ்.எம்.கோடாபய ஜயரட்ண,**
**கல்விச் செயலாளர்.**

**2013.06.07**
**கல்வி அமைச்சு,**
**இசுருபாய, பத்தரமுல்ல.**

பிரதிகள் :

1. அரச அங்கீகரிக்கப்பட்ட சகல பல்கலைக்கழகங்கள் மற்றும் ஏனைய மூன்றாம் நிலைக் கல்வி நிறுவகங்கள்
2. கணக்காய்வாளர்
3. மாகாண ஆளுனரின் செயலாளர்
4. கல்விப் பணிப்பாளர், தேசிய கல்வி நிறுவகம்
5. கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர்கள்
6. பிரதம ஆணையாளர், ஆசிரிய கல்வி
7. கல்வி அமைச்சின் கல்விப் பணிப்பாளர்கள்
8. கணக்காளர்கள்
9. தேசிய கல்விக் கல்லூரிப் பீடாதிபதிகள்
10. ஆசிரிய கல்லூரி அதிபர்கள்

**<u>உ.பு ஆவணம்</u>**

இதன் கீழ் விண்ணப்பிக்கக் கூடிய பாடநெறிகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. அவற்றை "கல்வி" தொடர்பாக அல்லது தமது சேவையுடன் நேரடியாகத் தொடர்புபடக்கூடிய பாடநெறியாக இருக்க வேண்டும்.

1. கல்வி தொடர்பான கலாநிதிப் பட்டம் (தத்துவமாணி)
2. கல்வி அல்லது கல்வி நிர்வாகம் தொடர்பான கல்வித் தத்துவமாணி, கல்விமாணி மற்றும் சமமான அல்லது அதனைவிட மேற்பட்ட மட்டத்திலான கல்வி தொடர்பான பட்டப்பின் பட்டப் பாடநெறி.
3. பல்வேறுபட்ட பாடங்களைக் கற்பிப்பதற்குரிய விஞ்ஞானமாணிப் பட்டப் பாடநெறி மற்றும் சமமான பாடநெறிகள்.
   - 3.1. விஞ்ஞானம் கற்பிப்பது தொடர்பான விஞ்ஞானமாணி பட்டப்பாடநெறி
   - 3.2. தகவல் தொழில்நுட்பம் தொடர்பான விஞ்ஞானமாணி பட்டப்பாடநெறி
   - 3.3. ஆசிரிய நூலகப் பொறுப்பாளர் தொடர்பான விஞ்ஞானமாணி பட்டப்பாடநெறி
   - 3.4. பௌதீகவியல் தொடர்பான விஞ்ஞானமாணி பட்டப்பாடநெறி
   - 3.5. கல்வி முகாமைத்துவம் தொடர்பான விஞ்ஞானமாணி பட்டப்பாடநெறி
   - 3.6. கல்விக்குரிய ஏனைய விஞ்ஞானமாணி பட்டப்பாடநெறி
   - 3.7. இசை மற்றும் நடனக் கற்கை தொடர்பான கலைமாணிப் பாடநெறி (அழகியற் பல்கலைக்கழகம்)
   - 3.8. கலைமாணிப் பாடநெறி (களணிப் பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் மொழியியல் கலைமாணி ஆங்கில மொழி பாடநெறிக்காக ஆங்கில மொழி ஆசிரியர்களுக்கு)

4. முதல்பட்டப் பாடநெறி
   - 4.1. கல்விமாணி பட்டப் பாடநெறி (தேசிய கல்வி நிறுவகம்)
   - 4.2. கலைமாணிப் பட்டப் பாடநெறி (இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்)
   - 4.3. கல்வி தொழில்நுட்பவியல் பட்டப் பாடநெறி (ஆங்கில மொழி கற்பித்தல்) (தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகம்)
   - 4.4. கல்வித் தொழில்நுட்பவியல் பட்டப் பாடநெறி (தொழில்நுட்பப் பாடங்களைக் கற்பித்தல்) (தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகம்)
   - 4.5. தகவல் மற்றும் தொடர்புசாதனத் தொழில்நுட்பம் தொடர்பான தொழில்நுட்பவியல் பட்டம் (மென்பொருள் தொழில்நுட்பம்) (தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகம்)

4.6. தகவல் மற்றும் தொடர்புசாதனத் தொழில்நுட்பம் தொடர்பான பட்டம் (பல்லூடக மற்றும் இணையத்தளத் தொழில்நட்பம்) (தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகம்)

4.7. தகவல் மற்றும் தொடர்புசாதனத் தொழில்நட்பவியல் பட்டம் (வலையமைப்பு தொழில்நுட்பம்) (தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகம்)

4.8. விஞ்ஞானம் / கலை / விஞ்ஞானம் மற்றும் கல்விக்குரிய ஏனைய முதல் பட்டப் பாடநெறி

5. கல்வித் துறைக்காக பயன்மிக்க பட்டப்பின் பட்ட டிப்ளோமா பாடநெறி

5.1. கல்வி தொடர்பான பட்டப்பின் பட்டப் பாடநெறி

5.2. கல்வி முகாமைத்துவம் மற்றும் நிர்வாகம் தொடர்பான பட்டப்பின் பட்ட டிப்ளோமா

5.3. நடன கற்பித்தல் தொடர்பான பட்டப்பின் பட்ட டிப்ளோமா

5.4. கல்வி வழிகாட்டல் மற்றும் ஆலோசனை தொடர்பான பட்டப்பின் பட்ட டிப்ளோமா

5.5. தகவல் மற்றும் தொழில்நுட்பம் தொடர்பான பட்டப்பின் பட்ட டிப்ளோமா பாடநெறி.

5.6. ஆசிரிய நூலகப் பொறுப்பாளர்கள் தொடர்பான பட்டப்பின் பட்ட டிப்ளோமா பாடநெறி.

5.7. இரண்டாம் மொழியாக ஆங்கிலம் கற்பிப்பது தொடர்பான பட்டப்பின் பட்ட டிப்ளோமா பாடநெறி.

6. கல்வித் துறைக்காக பயன்மிக்க டிப்ளோமா பாடநெறி

6.1. பாடசாலை முகாமைத்துவ டிப்ளோமா

6.2. ஆரம்ப பாடசாலை முகாமைத்துவ டிப்ளோமா

6.3. அதிபர் தொடர்பான டிப்ளோமா (பயிற்சிப் பாடநெறி)

6.4. முறைசாராக் கல்வி / வெளிநாட்டு மொழிக் கல்வி / விசேட கல்வி / நூலகம் மற்றும் தகவல் (விஞ்ஞானமாணி) / விஞ்ஞானம் / ஆசிரிய நூலகப் பொறுப்பாளர் / சமயக் கல்வி உட்பட கற்பித்தல் மற்றும் கல்வி முறைமை.

6.5. ஊடகப் பாடநெறி

6.6. தொழில்நுட்பப் பாடக் கல்வி (விவசாயம் / பூங்காவன நிர்வாகம் / மிருக கால்நடை நிர்வாகம் / சமுத்திர உயிரியல் வாழ் தொழில்நுட்பம் / தரை நீரியல் வாழ் உயிரின வள தொழில்நுட்பம் / உணவு விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பவியல் / மனைப்பொருளியல் / கைத்தறி கைத்தொழில் / நிர்மாணத் தொழில்நுட்பம் / மின்சாரம் மற்றும் இலத்திரனியல் தொழில்நுட்பம் / கலைத் தொழில்நுட்பம் / இயந்திரத் தொழில்நுட்பம் / மோட்டார் இயந்திர கலை)

6.7. உடற்கல்வி தொடர்பான டிப்ளோமா பாடநெறி / உயர் பயிற்றுவிப்பாளர் டிப்ளோமா பாடநெறி (தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவகம்)

6.8. அழகியற் கல்வி (சித்திரம் / நடனம் (பாரத / சிங்களம்) சங்கீதம் (மேலைத்தேய / கீழைத்தேய / கர்நாடக)

6.9. நடன மற்றும் இசைக் கலை / இலக்கியம் (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம் / அரபு) இலக்கிய சுவை

6.10. மேலதிக மொழி விருத்திப் பாடநெறி

6.11. தகவல் தொழில்நுட்பம் தொடர்பான டிப்ளோமா பாடநெறி

6.12. சமூக சேவைக் கல்லூரி மூலம் முழு நேரம் நடாத்தப்படும் இரு வருடகால டிப்ளோமா பாடநெறி

6.13. ஏனைய இயலுமைகள் கொண்ட கற்பிப்பதற்கான டிப்ளோமா பாடநெறி (ராகம வைத்திய பீடத்தின் மாற்றுத் திறனாளிகளைக் கொண்ட மாணவர்களுக்காக கற்பிக்கும் கல்விப் பிரிவின் மூலம் நடாத்தப்படும்)

7. இதற்கு மேலதிகமாக உரிய விண்ணப்பதாரர்கள் தமது சேவை வழங்கும் போது உரியதான விசேட பாடப் பரப்புக்கள் தொடர்பான டிப்ளோமா பாடநெறி.

8. கல்வித் துறைக்காக பயன்மிக்க சான்றிதழ் பாடநெறி.

## சம்பளத்துடனான கற்கை விடுமுறைக்கு அங்கீகரித்தல்

இலங்கை கல்வி நிர்வாக சேவையின் உத்தியோகத்தர், இலங்கை அசிரிய கல்வி நிர்வாக சேவையின் உத்தியோகத்தர்கள், இலங்கை அதிபர் சேவையின் அதிபர்கள், அரச பாடசாலைகள் மற்றும் அங்கிகரிக்கப்பட்ட தனியார் பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கும், பிரிவெனா ஆசிரியர்களுக்கும் இலங்கையின் பல்கலைக்கழகத்தில் மற்றும் ஏனைய மூன்றாம் நிலைக் கல்வி நிறுவனங்களில் பாடநெறியைத் தொடர்ந்தல் மற்றும் பரீட்சைகளுக்குத் தோற்றுவதற்காக சம்பளத்துடன் கற்கை விடுமுறையினை வழங்குதல்.

1. (அ) முழுப்பெயர் - தமிழில் : ........................................................................

........................................................................................................

(ஆ) முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர் - தமிழில் : ..........................................

(இ) ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில் முழுப்பெயர் : ..............................................

........................................................................................................

(ஈ) முதலெழுத்துக்களுடன் பெயர் - ஆங்கிலத்தில் : ..............................................

2. (அ) பதவியும் தரமும் : ........................................................................

(ஆ) முதல் நியமனத் திகதி : ........................................................................

(இ) நியமன வகை (உ-ம் : பட்டதாரி / போதனாவியல் டிப்ளோமா) : ..............................

(ஈ) நியமனம் நிரந்தரப்படுத்தப்பட்டுள்ளதா? ........................................................

3. (அ) பிறந்த திகதி : ஆண்டு .................... மாதம் ....................... திகதி ................

(ஆ) ஆண் / பெண் பால் : ........................................................................

(இ) தேசிய அடையாள அட்டை இல.: ........................................................................

4. சொந்த முகவரி : ........................................................................

........................................................................................................

5. தொலைபேசி இல.: நிரந்தரம் : ................................... கையடக்கம் : .........................

6. சேவை நிலையத்தின் பெயர் மற்றும் முகவரி : ..............................................

........................................................................................................

7. கல்வித் தகைமைகள் : ........................................................................

8. தொழில் தகைமைகள் : ........................................................................

9. சேவைக் காலம் : வருடங்கள் : ...................... மாதங்கள் : .................. நாட்கள் : ............

10. ஆசிரியர் பயிற்சிப் பாடநெறிக்காக செய்து கொண்ட பிணைக்கால எல்லை :

| பாடநெறி | பாடநெறியின் காலம் | | பிணையின் காலம் | |
|---|---|---|---|---|
| | இருந்து | வரை | இருந்து | வரை |
| | | | | |
| | | | | |
| | | | | |

11. இதற்கு முன்னர் சம்பளத்துடன் / சம்பளமற்ற கற்கை விடுமுறை பெற்றிருப்பின் அது தொடர்பான விபரங்கள் :

| பாடநெறி | பாடநெறியின் காலம் | | பிணையின் காலம் | |
|---|---|---|---|---|
| | இருந்து | வரை | இருந்து | வரை |
| | | | | |
| | | | | |
| | | | | |

12. தற்போது தாங்கள் ஆசிரிய கல்லூரி, கல்விக் கல்லூரி, தேசிய கல்வி நிறுவகத்தில் பாடநெறியினை தொடர்கிறீரா? (பாடநெறி, ஆரம்பித்த திகதி, இணைந்த திகதி, ஆசிரிய கல்லூரியின் பெயர் ஆகியவற்றைக் குறிப்பிடவும்) :

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

13. பல்கலைக்கழகத்தில் / நிறுவனத்தில் தாங்கள் தொடர்வதற்குள்ள கற்கை நெறி :

13.1. கற்கைநெறியின் பெயர் : ..........................................................................................

13.2. மொழி : ..............................................................................................................

13.3. கற்கை நெறி ஆரம்பிக்கும் திகதி : ..........................................................................

13.4. பாடநெறிக்குரிய கால எல்லை : ................................................................................

13.5. கற்கை விடுமுறை தேவைப்படும் கால எல்லை : .............. தொடக்கம் .............. வரை

கடந்த ஐந்து ஆண்டுகளுக்குள் எதுவித ஒழுக்காற்றுக் குற்றச்சாட்டுக்களுக்கும் உட்படவில்லையென்றும் மேற்கூறப்பட்ட தகவல்கள் சரியானதும் உண்மையானதும் என்றும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

.....................................

திகதி : ..............

விண்ணப்பதாரியின் ஒப்பம்

<u>அதிபர் / நிறுவனப் பொறுப்பாளரின் பரிந்துரை :</u>

மேற்கூறப்பட்ட ஆசிரியர் / ஆசிரியை / அதிபர் / உத்தியோகத்தர் .................. ஆம் திகதி தொடக்கம் இன்று வரை இக்கல்லூரியில் / நிறுவனத்தில் தொடர்ச்சியாகச் சேவையில் ஈடுபடுவதாகவும், அவருக்கு இறுதியாக .................... ஆம் மாதத்தில் கல்லூரியில் சம்பள அட்டவணையில் சம்பளம் செலுத்தியதாகவும், இவ் ஆசிரியர் / ஆசிரியை / அதிபர் / உத்தியோகத்தர் மேற்கூறப்பட்ட கால எல்லைக்காக சம்பளத்துடன் விடுமுறையை அங்கீகரிக்க பரிந்துரை செய்கிறேன் / செய்யவில்லை என அறிவிக்கிறேன். இவ்வுத்தியோகத்தர் / ஆசிரியரின் கடமைத் தழுவலுக்காக பொருத்தமான பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக உறுதிப்படுத்துகிறேன்.

திகதி : ..............

.........................................................

அதிபர் / நிறுவனப் பொறுப்பாளரின் ஒப்பம்
மற்றும் பதவி முத்திரை.

## பிரதிக் கல்விப் பணிப்பாளர் / வலயக் கல்விப் பணிப்பாளரின் பரிந்துரை :

மேற்கூறப்பட்ட ஆசிரியர் / ஆசிரியை / அதிபர் / உத்தியோகத்தருக்கு எதிராக கடந்த ஐந்து வருடங்களுக்குள் எதுவித குற்றச்சாட்டுக்களுக்கும் உட்படவில்லை என்றும் கடமைத் தழுவலுக்காக மேற்கொள்ளப்பட்டுள்ள வேலைத்திட்டங்கள் தொடர்பில் திருப்தியடைவதாகவும், மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானதும் சரியானதும் என்றும் உறுதிப்படுத்துகிறேன். …………………. தொடக்கம் ………………….. வரை சம்பளத்துடன் கற்கை விடுமுறைக்குப் பரிந்துரை செய்கிறேன் / செய்யவில்லை.

திகதி : …………..

……………………………………

வ.க.ப.ா/ பி.க.ப. ஒப்பம்

மற்றும் பதவி முத்திரை

## மாகாணக் கல்விப் பணிப்பாளரின் பரிந்துரை :

மேற்கூறப்பட்ட ஆசிரியர் / ஆசிரியை / அதிபர் / உத்தியோகத்தருக்கு எதிராக கடந்த ஐந்து வருடங்களுக்குள் எதுவிதக் குற்றச்சாட்டுக்களும் இல்லை என்றும் சகல தகவல்களும் உண்மையானதும் சரியானதும் என உறுதிப்படுத்துகிறேன். …………………. தொடக்கம் ………………….. வரை சம்பளத்துடன் கற்கை விடுமுறைக்குப் பரிந்துரை செய்கிறேன் / செய்யவில்லை.

திகதி : …………..

……………………………..

மா.க.ப. ஒப்பம்

மற்றும் பதவி முத்திரை

* குறிப்பு : மாதிரிப் படிவத்தில் கோரப்பட்டுள்ள சகல தகவல்களையும் பூரணப்படுத்துவது கட்டாயமானதாகும்.